DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 33/2025
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**A1 A4 ஆஜர் A2 A3 எதிரிகள் ஆஜர் இல்லை.** எதிரிகள் தரப்பில் 355 BNNS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| Name | மோகன் |
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | சித்தாமூர் |
| Taluk | செய்யூர் |
| Age | 54 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.03.2026**

**முதல் விசாரணை:**

1.) நான் தற்போது மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் 2023 ல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த காசிநாதன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை பற்றி நன்கு தெரியும். தற்போது அவர் பணி இட மாறுதல் ஆகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 05.06.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் காசிநாதன் நிலைய பொறுப்பில் இருந்தபோது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சை பெற்ற பாஸ்கர் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 142/2023 இதச பிரிவுகள் 341 294(b) 323 506(1) 1) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆகவும் அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குப்பன் மற்றும் மணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகசர் அசாஆ 3 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை தேடிவந்த நிலையில் 20.06.2023 ம் தேதி நிலையம் ஆஜரான எதிரிகளை குவிமுச பிரிவு 41A ன் கீழ் பிணையில் விடுத்துள்ளார். பின்னர் வழக்கில் காயம் பட்ட பாஸ்கர் என்பவருக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கிய கீதா என்பவரை **(அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341 294(b) 323 506(1) 1) கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

R. M...

**குறுக்கு விசாரணை**

3. நான் இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சக அதிகாரி சம்பவயிடம் சென்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

[illegible]

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

12/3/26

Judicial Magistrate No.II
Madurantakam